| ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | | |
|---|---|---|---|
| மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)<br>3rd Term Examination – 2022 (2023) | 60 | T | I |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I — தரம் 10<br>Business & Accounting Studies I — Grade 10 | நேரம் 1 மணி<br>Time 1 Hour | | |

குறிப்பு :-

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள (1),(2),(3),(4) ஆகிய விடைகளுள் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**
- **வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உமது தெரிவிற்கு (X) என்றவாறு அடையாளமிடுக.**

- **பின்வரும் விடயங்களை கவனித்து வினா 01 தொடக்கம் வினா 03 வரை விடையளிக்க.**

ஒவ்வொரு வருடமும் இலங்கையர்கள் தமிழ், சிங்களப் புத்தாண்டை வெகுவிமரிசையாக கொண்டாட எதிர்பார்ப்பர். இப்புத்தாண்டு காலத்தில் உணவு மற்றும் ஆடைகளுக்கு அதிகக் கேள்வி நிலவுகிறது. வணிகங்கள் இக் கேள்வியை எதிர்கொள்ள தயாராகின்றன. நாட்டின் பொருளாதார நெருக்கடி இந் நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தியுள்ளது.

1) உணவு மற்றும் ஆடை தொடர்பாக சரியான கூற்றை தெரிவு செய்க.
   1. மனிதன் உயிர் வாழ கட்டாயம் நிறைவு செய்யப்பட வேண்டும்.
   2. இரண்டு வகையான தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
   3. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை
   4. பண்டிகைக் காலத்தில் ஆடைகளை வாங்கினால் போதுமானது.

2) மேலே விடயங்களின் அடிப்படையில் பொருளாதார நெருக்கடியானது வணிகத்திற்கு,
   1. பலமாகும்
   2. பலவீனமாகும்
   3. வாய்ப்பொன்றாகும்
   4. அச்சுறுத்தலாகும்

3) தமிழ் சிங்களப் புத்தாண்டு காலங்களில் உணவு மற்றும் உடையை விட சேவைகளுக்கான தேவையும் அதிகரிக்கிறது அவ்வாறு அதிக கேள்வி நிலவக்கூடிய சேவை,
   1. போக்குவரத்து
   2. காப்புறுதி
   3. சுகாதாரம்
   4. வங்கி

4) தேவை மற்றும் விருப்பங்களின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| A பொதுவானது | D வரையறையற்றது |
| B வேறுபட்டது | E முதன்மையானது |
| C எளிமையானது | F உருவாக்கக்கூடியது |

விருப்பங்களின் பண்புகளை மட்டும் கொண்ட விடையை தெரிவு செய்க.

1. A B C  2. A B E  3. B D E  4. B D F

5) இலாப நோக்க வணிகங்களின் இரு பிரதான நோக்கங்கள்,
   1. நுகர்வோர் திருப்தி மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கல்.
   2. இலாபம் உழைத்தல் மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கல்.
   3. இலாபம் உழைத்தல் மற்றும் நுகர்வோர் திருப்தி.
   4. பொருட்களின் தரம் மற்றும் ஊழியர் நலன்களை அதிகரித்தல்



kalvi.lk

6) வணிகமொன்றில் இடர்களை எதிர்கொள்கின்ற, புத்தாக்கங்கள் செய்கின்ற மற்றும் தீர்மானங்களை மேற்கொள்பவர்,

1. வணிகர்
2. முயற்சியாளர்
3. உரிமையாளர்
4. முகாமையாளர்

7) மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்கின்ற எந்தவொரு விடயமும் ……………………..ஆகும். பௌதீக நிலைப்பாடுடைய எந்தவொரு விடயமும் ……………………………. எனப்படும்.

1. உற்பத்தி, பொருட்கள்
2. தேவை, சேவைகள்
3. வணிகம், பொருட்கள்
4. விருப்பங்கள், சேவைகள்

- அக்கறையுடைய தரப்பினர் சிலரின் நோக்கங்கள் பின்வருமாறு,
  - A – வரிகளைப் பெற்றுக் கொள்ளல்.
  - B – நியாயமான சம்பளம் பெறல்.
  - C – தொடர்ச்சியாக கட்டளைகளைப் பெறல்.

8) மேலே A , B மற்றும் C களில் தரப்பட்டுள்ள நோக்கங்களைக் கொண்ட அக்கறையுடைய தரப்பினர்கள்,

1. நிதி நிறுவனங்கள், முகாமையாளர்கள், வழங்குனர்கள்.
2. அரசு, ஊழியர்கள், வழங்குனர்கள்.
3. பொது மக்கள், உரிமையாளர்கள் , நுகர்வோர்.
4. போட்டியாளர்கள், முகாமையாளர்கள், உரிமையாளர்கள்.

9) வணிகமொன்றின் உரிமையாளரான சுதேர, வணிக முகாமைத்துவத்தில் முதுகலை பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார். இது அவரது வணிகத்திற்கு,

1. பலமாகும் 2. பலவீனமாகும் 3. வாய்ப்பொன்றாகும் 4. அச்சுறுத்தலாகும்

10) அரசாங்கம் , வணிகமொன்றில் தாக்கம் செலுத்தும் வழிமுறைகள் நிரல் X இலும் அவற்றிற்கான உதாரணங்கள் நிரல் Y இலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. சூழலைப் பாதுகாத்தல் | A அதிவேகப் பாதைகளை அகலப்படுத்துதல். |
| 2. உட்கட்டமைப்பு வசதிகள் | B கடன்களை குறைந்த வட்டியில் வழங்குதல் |
| 3. சாதகமான ஊக்குவிப்பு | C மத்திய சுற்றாடல் அதிகாரசபை |

X மற்றும் Y நிரல்களை சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடை

1. 1A ,2B, 3C 2.1B,2C,3A 3. 1C , 2B ,3A 4. 1C,2A,3B

11) சட்டச் சூழலில் சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மூலம் நிறைவேற்ற எதிர்ப்பார்ப்பது,

1. நுகர்வோரைப் பாதுகாத்தல்
2. உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தல்.
3. வணிகத்தைப் பாதுகாத்தல்
4. மேற்கூறிய யாவும்

12) தவறான கூற்றைத் தெரிவு செய்க.

1. தனித்துவமான உற்பத்தி முறை, எந்தவொரு வணிகத்தினதும் பலமாகும்.
2. புதிய நகரங்கள் உருவாக்கப்படல் வணிகத்தின் மிகச்சிறந்த வாய்ப்பாகும்.
3. சிறந்த வணிகர் ஒருவர் சுற்றுச் சூழலைப் பற்றி தொடர்ச்சியாக அக்கறை கொள்ள தேவையில்லை.
4. தற்போதுள்ள அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதன் மூலம் வணிகத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



kalvi.lk

- கீழே தரப்பட்டுள்ள பல்வேறு வணிக அமைப்புக்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு வினா 13 முதல் வினா 15 வரை விடையளிக்குக.

  A - இலங்கைப் புகையிரத திணைக்களம்

  B - கூட்டுறவுச் சங்கம் - நுகேகொட

  C - இலங்கை போக்குவரத்துச் சபை

  D – பிரசன்னா புத்தகசாலை

13) மேலே தரப்பட்டவற்றுள் இலாப நோக்குள்ள வணிகம்,

1. A  2. B  3. C  4. D

14) மக்களின் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் வணிக அமைப்பை அல்லது வணிக அமைப்புக்களை காட்டும் மிகப் பொருத்தமான விடை

1. A  2. B  3. A மற்றும் B  4. A மற்றும் C

15) சட்ட ஆளுமையற்ற வணிக அமைப்புக்கள்,

1. A மற்றும் B  2. A மற்றும் C

3. A மற்றும் D  4. B மற்றும் C

16) 25 ஐ விடக் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்ட வணிகங்கள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான வணிகமாகும். இதனை வரையறுத்துள்ள நிறுவனம்.

1. தொழிற்துறை தொழினுட்ப திணைக்களம்.
2. சனத்தொகை புள்ளி விபரவியல் திணைக்களம்
3. தொழில் பிணக்குச் சபை
4. மத்திய வங்கி

17) பின்வருவனவற்றுள் கணக்கீட்டில் கொடுக்கல் வாங்கலாக கருத முடியாத கூற்றை தெரிவு செய்க.

1. வெப்பம் காரணமாக ரூ 8000 பெறுமதியான இருப்பு அழிவடைந்துள்ளது.
2. ரூ 5000 சம்பளத்திற்கு ஊழியர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்.
3. கடன்பட்டோர் இறந்ததன் காரணமாக ரூ 15000 கடனை அறவிட முடியாதுள்ளது.
4. ரூ 5000 பெறுமதியான இருப்பை, உரிமையாளர் தனது சொந்த தேவைக் கருதி எடுத்துள்ளார்.

18) கார் விற்பனை வணிகமொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கார்,

1. நடைமுறையல்லா சொத்து  2. உரிமை

3. நடைமுறை சொத்து  4. நடைமுறையல்லா பொறுப்பு

19) வணிகமொன்றின் உரிமையை குறைக்கும் கொடுக்கல் வாங்கலை தெரிவு செய்க.

1. பெற்ற வட்டி  2. கடன்கொடுத்தோருக்கு செலுத்திய தொகை

3. வங்கிக் கடன் தவணைப் பணம் செலுத்துதல்  4. கட்டிடத் திருத்தச் செலவு

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 20 இலிருந்து 22 வரை விடையளிக்க.

  A - மின்கட்டணம் செலுத்தியது ரூ. 6000

  B - ரூ 1200 பெறுமதியான இருப்பு ரூ 1500 இற்கு சந்தனுக்கு விற்கப்பட்டது.

  C - கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூ 30 000

  D - ரூ 1500 வட்டி உள்ளடங்கலாக வங்கிக் கடனுக்காக ரூ 7500 செலுத்தப்பட்டது.



kalvi.lk

20) மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களில் உரிமையில் தாக்கம் செலுத்தாத கொடுக்கல் வாங்கல்

1. C  2. A  3. B  4. D

21) தரப்பட்டுள்ளவற்றுள் சொத்துக்களில் மட்டும் தாக்கம் செலுத்தக் கூடிய கொடுக்கல் வாங்கலை தெரிவு செய்க.

1. B  2. D  3. C  4. A

22) தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக சொத்துக்களில் ஏற்படக்கூடிய மாற்றத்தை சரியாகக் காட்டும் விடையை தெரிவு செய்க.

1. ரூ 10,500 ஆல் அதிகரிக்கும்
2. ரூ 10,500 ஆல் குறைவடையும்
3. ரூ 19,500 ஆல் அதிகரிக்கும்
4. ரூ 19,500 ஆல் குறைவடையும்

23) இரட்டைப் பதிவு தத்துவத்திற்கமைய குறைவடைதல் வரவாகவும், அதிகரித்தல் செலவாகவும் கொள்ளப்படும் கணக்குகளை மட்டும் கொண்ட விடையை தெரிவு செய்க.

1. பற்றுக் கணக்கு , மூலதனக்கணக்கு , தரகு வருமான கணக்கு , பெற்ற கழிவுக் கணக்கு.
2. கடன் கொடுத்தோர் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு, மூலதனக் கணக்கு, வங்கி வட்டிக் கணக்கு.
3. மூலதனக் கணக்கு, பெற்றக் கழிவுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு.
4. வைப்பு வட்டிக் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு, மூலதனக் கணக்கு, வாடகை வருமானக் கணக்கு.

24) பங்குலாப வருமானம் ரூ 45000 இற்கான காசோலையைப் பெறுதலுக்கான மிகச் சரியான இரட்டைப்பதிவைக் காட்டும் விடையை தெரிவு செய்க.

1. வங்கிக் கணக்கு – வரவு - ரூ 45,000
   பங்குலாப வருமானக் கணக்கு - செலவு - ரூ 45,000

2. காசுக் கணக்கு – வரவு - ரூ 45,000
   பங்குலாப வருமானக் கணக்கு - செலவு - ரூ 45,000

3. பங்குலாப வருமானக் கணக்கு - வரவு - ரூ 45,000
   காசுக் கணக்கு – செலவு - ரூ 45,000

4. பங்குலாப வருமானக் கணக்கு - வரவு - ரூ 45,000
   காசுக் கணக்கு – செலவு - ரூ 45,000

25) பின்வருவனவற்றுள் தவறானக் கூற்று எது?

1. கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குமுறைப்படி பதிவு செய்வதற்கு முதன்மை ஏடுகள் பயன்படுத்தப்படுகின்றன.
2. பேரேட்டுக் கணக்குகளுக்குப் பதிலாக முதன்மை ஏடுகள் தயாரிக்கபடுகின்றன.
3. கொடுக்கல் வாங்கல்களின் முதன்மை ஆவணம் மூல ஆவணங்களாகும்.
4. கொடுக்கல் வாங்கல்கள் முதலில் முதன்மை ஏடுகளில் பதிவு செய்யப்பட்டு பின்னர் பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.



kalvi.lk

- **பின்வரும் விடயங்களைக் கொண்டு வினா 26 மற்றும் வினா 27 ஆகியவற்றிற்கு விடையளிக்குக.**

இசுறு, கடனடிப்படையில் ரூ 40,000 பெறுமதியான இருப்பை கொள்வனவு செய்தார். இருப்பு கொள்வனவின் போது 10% வியாபாரக் கழிவு பெறப்பட்டது . கடனை மீள செலுத்தும் போது 5 % கழிவு பெறப்பட்டது.

26) இசுறு வணிகத்தின் கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படும் தொகை,
1. ரூ 36,000 2. ரூ 40, 0000 3. ரூ 34, 200 4. ரூ 38,000

27) கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவிற்கான மிகச் சரியான இரட்டைப் பதிவு,

| | | | |
|---|---|---|---|
| 1. கடன் கொடுத்தோர் கணக்கு | - | வரவு | ரூ 40,000 |
| காசுக் கணக்கு | - | செலவு | ரூ 36,000 |
| பெற்றக் கழிவுக் கணக்கு | - | செலவு | ரூ 4,000 |
| 2. காசுக் கணக்கு | - | வரவு | ரூ 36,000 |
| பெற்றக் கழிவுக் கணக்கு | - | வரவு | ரூ 4,000 |
| கடன் கொடுத்தோர் கணக்கு | - | செலவு | ரூ 40,000 |
| 3. கடன் கொடுத்தோர் கணக்கு | - | வரவு | ரூ 36,000 |
| காசுக் கணக்கு | - | செலவு | ரூ 34,200 |
| பெற்றக் கழிவுக் கணக்கு | - | செலவு | ரூ 1,800 |
| 4. கடன் கொடுத்தோர் கணக்கு | - | வரவு | ரூ 36,000 |
| காசுக் கணக்கு | - | செலவு | ரூ 36,000 |

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 28 , மற்றும் வினா 29 ஆகியவற்றிற்கு விடையளிக்க.**

ஆதில் வணிகத்தின் 31/01/2023 இல் சில்லறைக் காசுக்கணக்கு மீதி ரூ 700 ஆகும் பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகை பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| போக்குவரத்து செலவு | 1,300 |
| பொழுதுபோக்கு செலவு | 1,500 |
| தபாற் செலவு | 800 |
| நானாவித செலவு | 700 |

01/02/2023 இலிருந்து சில்லறைக்காசு வசக்கட்டை ரூ 3000 இனால் அதிகரிப்பதற்கு ஆதில் தீர்மானித்தார்.

28) 2023 ஜனவரி மாதத்தில் சில்லறை செலவுகளின் மொத்தம்,
1. ரூ 3300 2. ரூ 5000 3. ரூ 4300 4. ரூ 8000

29) 01/02/2023 இல் மீள் நிரப்பப்படும் தொகை
1. ரூ 7300 2. ரூ 4 300 3. ரூ 5000 4. ரூ 8000



kalvi.lk

30) இரட்டைத் தொழிற்பாட்டை நிறைவேற்றும் முதன்மை ஏடுகளைக் கொண்ட விடையை தெரிவு செய்க.

1. கொள்வனவு நாளேடு, வங்கிக் கணக்கு, பொது நாளேடு
2. காசேடு, வங்கிக் கணக்கு, பொது நாளேடு
3. காசேடு, வங்கிக் கணக்கு, சில்லறைக் காசேடு
4. காசேடு , சில்லறைக் காசேடு, பொது நாளேடு

31) அனிதா வணிகமானது அகிலா வணிகத்திடமிருந்து பெற்ற ரூ 10000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது. அனிதா வணிகத்தில், தரப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவு ,

1. வங்கிக் கணக்கு வரவு ரூ 10 000
   அகிலா கணக்கு செலவு ரூ 10 000

2. காசுக் கணக்கு வரவு ரூ 10 000
   வங்கிக் கணக்கு செலவு ரூ 10 000

3. அகிலா கணக்கு வரவு ரூ 10 000
   காசுக் கணக்கு செலவு ரூ 10 000

4. அகிலா கணக்கு வரவு ரூ 10 000
   வங்கிக் கணக்கு செலவு ரூ 10 000

32) இரத்தினம் வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்திற்கான வங்கிக்கூற்றின் செலவு மீதியானது,

1. வங்கியின் சொத்தொன்றாகும்.
2. வணிகத்தின் பொறுப்பொன்றாகும்
3. வணிகத்தின் சொத்தொன்றாகும்
4. வணிகத்தின் மேலதிக பற்றாகும்.

- **பின்வரும் விடயங்களைக் கொண்டு வினா 33 இலிருந்து வினா 35 வரை விடையளிக்க.**

சரணி வணிகத்தின் வங்கிக் கணக்கின் சாதகமான மீதி ரூ 43,500 ஆகும் .
இது பின்வரும் காரணங்களால் 31/12/2022 இல் வங்கிக் கூற்று மீதியுடன் வேறுபட்டு காணப்பட்டது.

A வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 10 000

B கடன்பட்டோரின் நேரடி வைப்பு ரூ 18 000

C நியையான கட்டளையின் பெயரிலான காப்புறுதி தவணைக் கட்டணக் கொடுப்பனவு ரூ 7 000.

33) வங்கிக் கூற்று மீதியை விட வங்கிக் கணக்கு மீதி குறைவாக காணப்படுவதற்கு ஏதுவாக அமையக் கூடிய காரணம் அல்லது காரணங்களை தெரிவு செய்க.

1. A மட்டும்
2. A மற்றும் B
3. B மட்டும்
4. B மற்றும் C

34) 31/12/2022 இல் சீராக்கிய வங்கி மீதி ,

1. ரூ 25 500
2. ரூ 32 500
3. ரூ 50 500
4. ரூ 54 500



kalvi.lk

35) 31/12/2022 இல் வங்கிக் கூற்றின்படி வங்கி மீதி ,

1. ரூ 42 500 2. ரூ 64 500
3. ரூ 44 500 4. ரூ 60 500

36) விற்பனைப் பட்டியலில் பின்வருமாறு நிபந்தனைக் காணப்பட்டது.

10 / 30 தேறிய 60

இந் நிபந்தனைக்கமைய பின்வருவனவற்றுள் சரியான கூற்றை தெரிவு செய்க.

1. பணம் செலுத்துவதற்கான அதிகபட்ச காலம் 30 நாட்கள்.
2. 10 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படின் 30% கழிவு வழங்கப்படும்.
3. 60 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படின் 10% கழிவு வழங்கப்படும்.
4. 30 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படின் 10% கழிவு வழங்கப்படும்.

37) உரிமையாளரால் ரூ 250,000 முதலிடப்படுவதை பதிவு செய்வதற்கான மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடு.

1. பற்றுச் சீட்டு மற்றும் காசேடு
2. நாட்குறிப்புக் கைச்சாத்து மற்றும் பொது நாளேடு
3. கொடுப்பனவுக் கைச்சாத்து மற்றும் காசேடு
4. பட்டியல் மற்றும் பொது நாளேடு

38) பேரேட்டு கணக்குகளின் சுருக்கம்,

1. பொது நாளேடு 2. வங்கிக் கூற்று 3. பரீட்சை மீதி 4. நிதிக் கூற்றுக்கள்

- **வினா 39 மற்றும் 40 இற்கு பின்வரும் தகவல்களைக் கொண்டு விடையளிக்க.**

சுகந்தன் வணிகத்தில் 31/12/2022 இல் பின்வரும் தவறுகள் கண்டறியப்பட்டன.

A ஏடுகளில் தவறவிடப்பட்ட கொள்வனவுப் பட்டியல் ரூ 20 000
B தொலைபேசி கட்டணம் செலுத்தியது ரூ 2500 காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
C கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு ரூ 3000 ஏடுகளில் இருமுறை பதியப்பட்டிருந்தது.

39) பரீட்சை மீதியின் சமப்பாட்டில் தாக்கம் செலுத்தக்கூடிய வழுக்கள்,

1. B மற்றும் D மட்டும் 2. B மட்டும்
3. D மட்டும் 4. B மற்றும் C மட்டும்

40) வழு A ஐ திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு ,

1. கொள்வனவுக் கணக்கு - வரவு - ரூ 20,000
   கடன் கொடுத்தோர் கணக்கு - செலவு - ரூ 20,000

2. கொள்வனவுக் கணக்கு - வரவு - ரூ 20,000
   காசுக் கணக்கு - செலவு - ரூ 20,000

3. கொள்வனவுக் கணக்கு - வரவு - ரூ 20,000
   கடன்பட்டோர் கணக்கு - செலவு - ரூ 20,000

4. கடன்கொடுத்தோர் கணக்கு - வரவு - ரூ 20,000
   கொள்வனவுக் கணக்கு - செலவு - ரூ 20,00

( 1 X 40 = 40 புள்ளிகள்)



kalvi.lk

| | |
|---|---|
| ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)<br>3rd Term Examination – 2022 (2023) | 60 T II |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II தரம் 10<br>Business & Accounting Studies II Grade 10 | நேரம் 2 மணித்தியாலங்கள்<br>Time 2 Hours |

குறிப்பு :-

- **ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் , பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

1) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா I முதல் X வரை விடை தருக.

சவிந்தி மற்றும் நவிந்தி இரட்டைச் சகோதரிகளாவர், சிறு வயது முதல் தாம் விரும்பிய, வணிகக்கல்வி பாடத்தை க.பொ.த (உ/த) இல் கற்றனர்.

சிறு வயது முதலே தமக்கு சொந்தமான வணிகம் ஒன்றை ஆரம்பிக்க ஆர்வமாக உள்ளனர். இதனடிப்படையில் மிகச் சிறந்த அழகுக்கலை நிபுணரான தனது அத்தையை பார்த்து ஈர்க்கப்பட்ட இவ்விரு அழகிய சகோதரிகளும் அழகுக்கலையை தெரிவு செய்தனர்.

மூன்று மாதகால அழகுசாதனவியல் கற்கை நெறியை நிறைவு செய்த பின்னர் தனது வீட்டின் முன் அறையை சலூன் ஒன்றாக புனரமைத்தனர். இருவரும் தலா ரூ 100,000 இனை மூலதனமாக இட்டு 2023 ஜனவரி 01 இல் ''சவி & நவி அழகு நிலையம்'' வணிகத்தை ஆரம்பித்தனர்.

அதே நாளில் ரூ 20,000 பெறுமதியான கருவிகளை கொள்வனவு செய்தனர். மிகக் குறைந்த கால அளவிலேயே , தரமான சேவையை வழங்கி இளம் பெண்களின் நம்பிக்கையை வென்ற பிரபல்யமான வணிகமொன்றாக ''சவி & நவி அழகு நிலையம்'' மாற்றமடைந்தது.

மேலும் , தமது வணிகத்தை வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய மற்றும் சட்ட ஆளுமையுடைய வணிகமொன்றாக விஸ்தரிப்பதற்கு எண்ணியுள்ளனர். வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலம் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றனர்.

2023 ஜனவரி 01 இல் 12% வட்டியில் வங்கிக்கடன் ரூ 100 000 பெறப்பட்டது. ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

1) கிறீம், பவுடர், நகப் பூச்சு போன்ற அழகுநிலையத்திற்கு தேவையான பொருட்கள் ரூ 50 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டன.
2) உதவியாளருக்கான சம்பளக் கொடுப்பனவு ரூ 20 000
3) மின் கட்டணம் செலுத்தியது ரூ 10 000
4) 31 ஜனவரி 2023 வரை வங்கிக் கடன் வட்டி செலுத்தப்படவில்லை.

I. a) ''சவி & நவி அழகு நிலையம்'' எவ் வணிக அமைப்பு வகையை சார்ந்தது?
b) மேலே நீர் குறிப்பிட்ட வணிக அமைப்பின் அனுகூலங்கள் இரண்டை தருக.

II. a) நோக்க அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட வணிகத்தை வகைப்படுத்துக.
b) உரிமை அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட வணிகத்தை வகைப்படுத்துக.



kalvi.lk

III. a) ''சவி & நவி அழகு நிலையம்'' வணிகத்தின் பலங்கள் 2 தருக.
b) மேலே தரப்பட்டுள்ள வணிகத்தை உற்பத்தி தன்மை அடிப்படையில் வகைப்படுத்துக.

IV. a) இவ் வணிகம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமா?
b) ஆம் எனின், பதிவு செய்ய வேண்டிய சட்டத்தை தருக.

V. a) 01 ஜனவரி 2023 இல் கணக்கீட்டு சமன்பாட்டை பெறுமதிகளுடன் எழுதுக.

VI. a) கருவிகளை கொள்வனவு செய்தமையை பதிவு செய்வதற்கான முதன்மை ஏடு எது?
b) இவ்வணிகத்தின் இரண்டு செலவினங்களை பெறுமதியுடன் தருக.

VII. a) வங்கிக் கடன் பெற்றமைக்கான இரட்டைப் பதிவை பெறுமதியுடன் எழுதுக.
b) 2023 ஜனவரியில் செலுத்த வேண்டிய வட்டித்தொகையை கணிக்க.

VIII. a) 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களை பெறுமதியுடன் தருக.
b) 2023 ஜனவரியில் 01 இல் உள்ளவாறான நடைமுறையல்லா சொத்தை பெறுமதியுடன் தருக.

IX. 2023/01/31 இல் உள்ளவாறான காசு மீதியைக் கணிக்க.

X. a) காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள ஆரம்பிக்க வேண்டிய கணக்கை குறிப்பிடுக.
b) சவிந்தி மற்றும் நவிந்தியின் எதிர்ப்பார்ப்பின்படி வரையறுக்கப்பட்ட பொறுப்பு மற்றும் சட்ட ஆளுமையுள்ள வணிகமாக விஸ்தரிப்பதாயின், பொருத்தமான வணிக அமைப்பு வகையையும் அது தொடர்பான சட்டத்தையும் எழுதுக. (2X10=20 புள்ளிகள்)

## பகுதி II – வணிகக்கல்வி

2) I. வணிகம் என்பதை வரையறுக்க. ( 02 புள்ளிகள்)

II . **பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா எனக் குறிப்பிடுக.**
a) மனித தேவை, விருப்பங்களை நிறைவேற்றுதல் வணிகத்தின் அடிப்படையாகும்.
b) உரிமையாளர் முதலிட்ட தொகைக்கேற்ற வருமானத்தை வழங்குவதற்காக வணிகங்கள் இலாபம் உழைக்க வேண்டும்.
c) காப்புறுதி கம்பனிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சேவை வணிகங்களாகும்.
d) ஒவ்வொரு வணிகரும் முயற்சியாளராவார். ( 02 புள்ளிகள்)

III. மட்பாண்ட உற்பத்திகளுக்கு உகந்த மண்வளம் கொண்ட பகுதியில் வசிக்கும் விரான், தனது தோட்டத்தில் தோண்டி பெற்ற களிமண்ணினால் அலங்கார சாடிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறார்.
a) பதப்படுத்தப்பட்ட களிமண் எவ்வுற்பத்திக் காரணியாகும்?
b) மேலே நீர் குறிப்பிட்ட உற்பத்திக் காரணியாக, பதப்படுத்தப்பட்ட களிமண் அமையக் காரணம் யாது? ( 02 புள்ளிகள்)

IV. சிறிதாஸ, மிகப் பிரபல்யமான தச்சுத் தொழிற்சாலை ஊழியராவார். அவர் பணியாற்றும் தச்சுத் தொழிற்சாலையானது, வாடிக்கையாளர்கள் மத்தியில் தளபாடங்களுக்கு அதிகக் கேள்வியை கொண்டுள்ளது.
a) சிறிதாஸ அவரது தொழிற்தளம் தொடர்பாக அதிக அக்கறை கொள்வதற்கான காரணங்கள் 2 தருக.
b) இத் தச்சுத் தொழிற்சாலையில் அக்கறை செலுத்தும் வேறு பிரிவினர்கள் இருவரை தருக.
( 02 புள்ளிகள்)
( மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

3) I. அகச்சூழல் காரணிகள் 3 தருக. ( 02 புள்ளிகள்)

II. **பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா பொய்யானதா எனக் குறிப்பிடுக.**

a) புறச்சூழல் என்பது, வணிக நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணிகளைக் கொண்ட சூழலாகும்.

b) நுகர்வோர் விவகார அதிகாரசபை நுகர்வோரை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது.

c) நாடொன்றின் தேசிய வருமானம் எப்பொழுதும் அந்நாட்டு மக்களிடையே சமமாக பகிரப்படுகிறது.

d) பணவீக்கம் என்பது , பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனையில் நிர்ணயிக்கப்பட்ட பொது விலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பாகும். ( 02 புள்ளிகள்)

III. சமிந்து தனது தாயாரின் உதவியுடன் கைப்பை உற்பத்தி வணிகமொன்றை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார். அவரது உற்பத்திகளுக்கு அதிக கேள்வி நிலவுகிறது எனினும் இறக்குமதி செய்யப்பட்ட கைப்பைகள் சந்தைக்கு வந்துள்ளமையால் கேள்வியானது படிப்படியாக குறைந்து வருவதாக சமிந்து கூறுகின்றார்.

a) இவ் வணிகத்திற்கு சவாலாக காணப்படும் சூழல் காரணி எது?

b) மேலே குறிப்பிட்ட புறச்சூழல் காரணி உள்நாட்டு வணிகங்களில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் வழிமுறைகள் 2 எழுதுக. ( 02 புள்ளிகள்)

IV. இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக முதலீட்டாளர்கள் கடும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். வங்கிக் கடன் வட்டி வீதங்கள் அதிகரித்து வருதல் புதிய வணிகங்களை ஆரம்பிப்பதற்கான நிதி வழங்குவதில் தடையாக காணப்படுகிறது.

a) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதாரக் காரணியை குறிப்பிடுக.

b) வணிகங்களுக்கு நிதியை திரட்டுகின்ற, வங்கிக் கடன் தவிர்ந்த வேறோரு வழிமுறையைக் குறிப்பிடுக. ( 02 புள்ளிகள்)

( மொத்தம் 08 புள்ளிகள்)

4) I . உரிமை அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் பாய்ச்சற்கோட்டுப் படத்தை தருக. ( 02 புள்ளிகள்)

II. **பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா பொய்யானதா எனக் குறிப்பிடுக**

a) வணிகங்களை,அளவு அடிப்படையில் சிறியளவிலான, நடுத்தரளவு மற்றும் பாரியளவிலான வணிகங்கள் என வகைப்படுத்த முடியும்.

b) கம்பனியொன்றின் சாதாரணப் பங்குகளைக் கொள்வனவு செய்கின்ற நபர் அக்கம்பனியின் உரிமையாளராவர்.

c) தொடர்ந்தியங்குதல் மற்றும் சட்ட ஆளுமை ஆகிய இரண்டும் பங்குடைமையொன்றின் பண்புகளாகும்.

d) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றில், பங்குதாரர்களின் பொறுப்பானது அவர்கள் கொள்வனவு செய்துள்ள பங்குகளின் பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. ( 02 புள்ளிகள்)

III. சச்சின் சுதந்திரமாக முடிவெடுப்பதற்கு விரும்புவதுடன் அவரது வணிகத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கு கடுமையாக உழைக்கின்றார்.

a) சச்சின் வணிகமானது, எவ் வணிக அமைப்பு வகையை சார்ந்தது?

b) அவ் வகையான வணிக அமைப்பின் அனுகூலங்கள் 2 தருக. ( 02 புள்ளிகள்)

IV. தமக்கு உரிமையாகவுள்ள, சமூக நலனுக்காக செயற்படுகின்ற, ஜனநாயக நிர்வாகமுள்ள வணிக அமைப்பு தொடர்பாக இரு நண்பர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

a) அவர்களுக்கு நீர் முன்வைக்கும் வணிக அமைப்பு யாது?

b) அவ் வகையான வணிக அமைப்பை பதிவு செய்வது தொடர்பான சட்டம் யாது?

( 02 புள்ளிகள்)

( மொத்தம் 8 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II – கணக்கீடு

- **இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

5) I a) சொத்து மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் பொதுப் பண்புகள் 2 தருக.
b) வணிகத்தின் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் 2 எழுதுக.
( 02 புள்ளிகள்)

II. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவை எழுதுக
a) சில்லறை வியாபாரமொன்றை நடாத்தும் தெதுனு ரூ 2400 பெறுதியான இரு பால்மா பைக்கற்றுக்களை தனது சொந்த தேவைக்காக வணிகத்திலிருந்து எடுத்தார்.
b) "நிரங்கா தளபாடங்கள்" வணிகமானது " மொரட்டுவ தளபாடங்கள்" வணிகத்திலிருந்து ரூ 250 000 பெறுமதியான தளபாடங்களை கொள்வனவு செய்தது.
(02 புள்ளிகள்)

III. ராஜேஷ்வரி வணிகத்தில் 01/01/2023 இல் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| தளபாடங்கள் | 75 000 |
| இருப்பு | 35 000 |
| கடன்கொடுத்தோர் | 45 000 |
| காசு | 125 000 |
| கடன்பட்டோர் | 30 000 |
| வங்கிக்கடன் | 100 000 |

ஜனவரி மாத கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு சமன்பாட்டில் தாக்கம் செலுத்தியுள்ள விதத்தை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| திகதி | சொத்து | | | | = உரிமை + பொறுப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் (ரூ) | இருப்பு (ரூ) | கடன்பட்டோர் (ரூ) | காசு (ரூ) | மூலதனம் (ரூ) | கடன் கொடுத்தோர் (ரூ) | வங்கி கடன் (ரூ) |
| 02/01/2023 | | -25 000 | + 28 000 | | + 3 000 | | |
| 07/01/2023 | | | | - 6 000 | - 1 000 | | - 5 000 |
| 18/01/2023 | + 20 000 | | | - 2 0000 | | | |
| 23/01/2023 | | | | -15 000 | | - 15 000 | |
| | | | | | | | |

வேண்டப்படுவது,
a) இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை பெறுமதியுடன் தருக. ( 02 புள்ளிகள்)
b) பின்வரும் உருப்படிகளின் 31/01/2023 இல் உள்ளவாறான பெறுமதிகளை தருக.
1. நடைமுறையல்லா சொத்துக்கள்
2. நடைமுறை சொத்துக்கள்
3. உரிமை
4. மொத்தப் பொறுப்புக்கள் ( 02 புள்ளிகள்)



kalvi.lk

IV. ‘‘சுஹன்ஸா டெக்ஸ்டைல்ஸ்’’ வணிகத்தில் 2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | கொடுக்கல் வாங்கல்கள் | மூல ஆவணத்தின் இலக்கம் |
|---|---|---|
| 08/01/23 | ரூ 50000 பெறுமதியான இருப்புக்கள் ‘‘ரெயின்போ கார்மென்ட்ஸ்’’ வணிகத்திடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது (வியாபாரக் கழிவு 5% கழிக்கப்பட்டது) | 034 |
| 16/01/23 | ருசிறு வணிகத்திலிருந்து காட்சிபொம்மைகள் மற்றும் ஹெங்கர்ஸ் (Hangers) ரூ 25 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது. (வியாபாரக் கழிவு 10% கழிக்கப்பட்டது) | 0008 |
| 23/01/23 | ‘‘DJ பெஷன்ஸ்’’ வணிகத்திலிருந்து ரூ 75 000 பெறுமதியான சாரிகள் காசு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது. | 041 |
| 25/01/23 | ‘‘ஹேமந்த டெக்ஸ்டைல்ஸ்’’ வணிகத்திலிருந்து சிறுவர்களுக்கான ஆடை இருப்பு கொள்வனவு ரூ 130 000 | 095 |

வேண்டப்படுவது,

a) ஜனவரி மாதத்திற்கான கொள்வனவு நாளேட்டை தயாரிக்க. ( 02 புள்ளிகள்)

b) கொள்வனவு நாளேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்க. ( 02 புள்ளிகள்)

( மொத்தம் 12 புள்ளிகள்)

6) I. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய முதன்மை ஏட்டையும் , மூல ஆவணத்தையும் பெயரிடுக.

a) ‘‘ஏஷியன் டிரேடஸ்’’ வணிகத்திடமிருந்து, வணிகப் பாவனைக்காக ரூ. 350 000 பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.

b) ரூ 65000 இற்கு காசுக்கு இருப்பு கொள்வனவு செய்யப்பட்டது ( 02 புள்ளிகள்)

II. a) ‘‘வங்கி மேலதிகப் பற்று’’ என்பதை விபரிக்க.

b) கடன் கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட ரூ 12000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டமைக்கான இரட்டைப் பதிவை எழுதுக. ( 02 புள்ளிகள்)

III. சுமதி வணிகத்தின் சில்லறைக்காசு கட்டுநிதி ரூ 3000 ஆகும். 2023 ஜனவரி மாத சில்லறைக்காசுக் கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | கைசத்து இல | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 08/01/2023 | 001 | போக்குவரத்து கட்டணம் | 950 |
| 16/01/2023 | 002 | பொழுதுபோக்கு செலவினம் | 875 |
| 22/01/2023 | 003 | பதிவுத்தபால் கட்டணம் | 700 |
| 29/01/2023 | 004 | அதிவேகப்பாதை நுழைவுக் கட்டணம் | 300 |

வேண்டப்படுவது

- மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை சில்லறைக்காசேட்டில் பதிவு செய்து சமப்படுத்தி 01/02/2023 இல் மீள் நிரப்புக ( 04 புள்ளிகள்)



kalvi.lk

IV. அஷாந்தி வணிகத்தின் ஜனவரி 31 இல் சாதமான வங்கி மீதி ரூ 38000 ஆகக் காணப்பட்டது இம் மீதி வங்கிக் கூற்று மீதியுடன் வேறுபட்டு காணப்பட்டது.
பின்வருவன காரணங்களாக இனங்காணப்பட்டன.

01. வைப்பு செய்யப்பட்ட ஆனால் வசூலிக்கப்படாத காசோலை ரூ 16000.
02. வங்கிக் கட்டணங்கள் ரூ 2500
03. வழங்கப்பட்ட ஆனால் இன்னும் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 22 800
04. நேரடி வைப்பு ரூ 8500

வேண்டப்படுவது,

a) 31/01/2023 இல் சீராக்கிய வங்கிக் கணக்கை தயாரிக்க.
b) 2023 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரிக்க.

( 04 புள்ளிகள்)

7) I. இன்று பெரும்பாலான வணிகங்கள் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணணிமயப்படுத்தியுள்ளது.

a) வணிகங்களில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு மென்பொருள் பொதிகள் ( Accounting Packages) இரண்டு தருக. ( 02 புள்ளிகள்)
b) கணணிமயமாக்கப்பட்ட கணக்கீட்டின் அனுகூலம் மற்றும் பிரதிகூலம் ஒன்று வீதம் தருக. ( 02 புள்ளிகள்)

II. "அஞ்சலி தளபாடங்கள்" வணிகத்தின் 31/12/2023 இல் காணப்பட்ட மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| காசு | 110 000 |
| கொள்வனவு | 80 000 |
| விற்பனை | 125 000 |
| கடன்பட்டோர் | 25 000 |
| கடன்கொடுத்தோர் | 30 000 |
| அலுவலக உபகரணம் | 60 000 |
| விற்பனை தரகு | 8 000 |
| 15% முதலீடு | 50 000 |
| பெற்ற கழிவு | 2 000 |
| பற்றுக்கள் | 5 000 |
| மூலதனம் | 165 000 |

வேண்டப்படுவது,

31/12/2023 இல் உள்ளவாறான பரீட்சை மீதியை தயாரிக்க. (02 புள்ளிகள்)

III. ஹம்சா வணிகத்தில் 01/01/2023 இல் காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு,

| | | ரூபா |
|---|---|---|
| காசு | | 98 000 |
| கடன்பட்டோர் - பவனி | | 25 000 |
| கடன்கொடுத்தோர் - அக்ரம் | | 50 000 |
| | வினுதி | 10 000 |
| மூலதனம் | | 63 000 |



kalvi.lk

2023 ஜனவரி மாதத்தின் முதல் இரு வாரங்களில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்ககள் பின்வருமாறு,

| | |
|---|---|
| 02/01/2023 | கடன்பட்டோர் பவனியின் ரூ 12000 பெறுமதியான கடன் 5% கழிவுடன் தீர்க்கப்பட்டது. |
| 06/01/2023 | அக்ரமிற்கு ரூ 35000 பெறுமதியான கடன் தீர்க்கப்படும் போது ரூ 1000 கழிவு பெறப்பட்டது. |
| 11/01/2023 | விணுதியின் கடனானது ரூபா 9500 வழங்கப்பட்டு தீர்க்கப்பட்டது |
| 15/01/2023 | ரூ 13000 கடனுக்கான காசோலை பவனியிடமிருந்து பெறப்பட்டது. 5% கழிவு வழங்கப்பட்டதுடன் அன்றைய தினமே காசோலை வைப்பிலிடப்பட்டது. |

வேண்டப்படுவது,

- ''ஹம்சா வணிகத்தின்'' முடிவடைந்த இரண்டு வாரங்களுக்கான காசேட்டை தயாரித்து 14/01/2023 இல் சமப்படுத்துக. ( 04 புள்ளிகள்)

IV. சஜானா வணிகத்தில் 31/12/2023 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வேறுபாட்டு தொகை ரூ 7500 தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. ஏனெனில், செலவு நிரலின் கூட்டுத்தொகை வரவு நிரலின் கூட்டுத்தொகையை விட அதிகமாகக் காணப்பட்டது.

பின்னர், பின்வருவன வேறுபாட்டிற்கான காரணங்களாக இனங்காணப்பட்டன.

01. பெற்ற கழிவு கணக்கின் மீதி ரூ 3000 பரீட்சை மீதியின் வரவு நிரலில் பதியப்பட்டுள்ளது.
02. ரொனிதிக்கு வழங்கப்பட்ட ரூ 8500 கணக்குகளில் இரு முறை பதியப்பட்டுள்ளது.
03. செலுத்திய தரகு ரூ 4500 காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
04. காசுக்கு கொள்வனவு ரூ 23 000 காசுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளதுடன் கொள்வனவு கணக்கில் ரூ 32000 எனப் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது,

1. மேலே வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்.
2. தொங்கல் கணக்கு ( 04 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**